# "கொம்புமுறியும் தம்பிலுவில் பாணமை உறவும் தொடர்பும்" சமூக நல்லினக்கத்திற்கான செயல்நிலை ஆய்வு

LIBRARY
03 NOV 2020
EUSL SRI LANKA

ஆய்வாளர் :- திரு. உருத்திரமூர்த்தி சுமன்

பதிவிலக்கம் :- EU/PGS/2018/MA(D&T)/01

சுட்டிலக்கம் :- PGS/MA/(D&T)200

முதுகலைமாணி நாடகமும் அரங்கியலும் பட்டத்தேர்வின் ஒரு பகுதியை நிறைவு செய்யும் முகமாக கிழக்கு பல்கலைகழக கலை கலாசார பீடத்தின் நுண்கலைத் துறைக்கு 2019ம் ஆண்டு இவ் ஆய்வு சமர்ப்பிக்கப்படுகிறது.

MA34
Thesis
Library - EUSL

Eastern University, Sri Lanka
Academic Affairs Department
14 JUN 2019
Vantharumoolai
Chenkalady

நுண்கலைத்துறை

கலைகலாசார பீடம்

கிழக்கு பல்கலைக்கழகம்

வந்தாறுமூலை,

மட்டக்களப்பு,

செங்கலடி,

இலங்கை

2019.

PROCESSED
MAIN LIBRARY, EUSL

## ஆய்வு அறிமுகம்

கண்ணகியம்மன் சடங்கு நடைபெறும் ஆலயங்களில் கொம்பு விளையாட்டானது நடைபெற்று வந்தது. இவ் விளையாட்டு பக்தி உணர்வையும், மன அமைதியையும், மகிழ்ச்சியையும் அளித்து வந்தது. இவ் விளையாட்டின் தொண்மை பற்றி ஆராயும் போது நீதி தவறிக் கோவலனை கொலை செய்வித்த பாண்டிய மன்னனை பழிவாங்கி மதுரையை எரித்தும் சீற்றம் தணியாத கண்ணகியை சாந்தப்படுத்துவதாக இடையர் குல மங்கையரும் இளைஞர்களும் ஒரு காதல் கலந்த விளையாட்டாக இதனை செய்து வந்ததாக கூறப்படுகிறது. பண்டைய மட்டக்களப்பு தமிழகத்தில் கண்ணகி வழிபாடு இடம் பெற்ற பல இடங்களிலும் இக் கொம்பு விளையாட்டு நடைபெற்று வந்தது.

வறட்சி நிலவிய காலங்களில் நெற்பயிர் கருகும் சந்தர்ப்பங்களில் அம்மனை வேண்டி கொம்பு நேர்த்தி வைப்பர். மழைபொழிந்து பயிர் விளையும் இதனைத் தொடர்ந்தே கொம்பு விளையாட்டுக்கள் நடைபெற்று வந்தது. கோடிய நோய் சுகமாவதற்கும் நேர்த்தி வைத்து விளையாடப்பட்டது.

கொம்புமுறி விளையாட்டில் கொம்புத் தலைவர்கள் இருவரைத் தெரிவு செய்வர். இவர்களே இவ் விளையாட்டிற்கு பொறுப்பாக இருப்பர். இவர்களுடன் வடசேரி, தென்சேரி ஆகிய இரு சேரிப்பக்கங்களிருந்தும் இரு விளையாட்டுக் குழுக்கள் தெரிவு செய்யப்படும். இக் கொம்பு விளையாட்டின் போது இரு சாரரிற்கும் இடையே நடைபெறும் பிணக்குகளை தீர்ப்பதற்காக சமாதான சபை தெரிவு செய்யப்படும். பின்னர் குறிப்பிட்ட நாளில் கொம்பு விளையாட்டு நடைபெறும். இங்கு வடசேரி கோவலனையும், தென்சேரி அம்மாளையும் குறிக்கும் இவ் இரு சேரிகளும் பண்டு தொட்டு வரும் குடி முறையில் அமைந்திருக்கும்.

ஆலய முற்றத்தில் அமைந்திருக்கும் கொம்பு சந்தியில் தேங்காய் உடைத்து கொம்பு விளையாட்டு ஆரம்பமாகும். இதனைத் தொடர்ந்து 17 கொம்புகள் முறிக்கப்படும். இவ்வாறு 17 கொம்புகளை பூட்டி இழுக்கப்படல் கொம்பு விளையாட்டின் சிறப்பம்சமாகும். இக் கொம்பு முறிக்கும் காலத்தில் வெற்றி பெற்ற சேரியர் தங்கள் வெற்றியை ஆடல் பாடல்களாக கொம்புச் சந்தியில் நடாத்தி வந்தனர். இக் கொம்பை முறிப்பதற்காக செவ்வாய் குத்தி என்ற வைரமான மரம் நடப்பட்டிருக்கும்.

கொம்பு முறிப்பதற்கான வடம் இம் மரத்திலே கட்டப்பட்டிருக்கும் இரு சேரியினரும் வடத்தினை இழுத்து கொம்பினை முறிப்பர். வெற்றி பெற்ற சேரியினர் மீது வசைப்பாடல்கள் இயற்றப்படும்.

"வடசேரி கொம்பு எங்கேயெங்கே

வண்ணாண்ட சாடிக்கு உள்ளே உள்ளே

தென்சேரி கொம்பு எங்கேயெங்கே

சித்திரத்தேருக்கு மேலே மேலே"

இறுதியாக முறிக்கும் கொம்பு தண்ணீர்க்கொம்பு அம்மாள் வெற்றி பெறுவர்.

இதன்போது இருசேரி கொம்புகளை கட்டுக்களாக தங்கள் தலைமீது சுமந்து கொண்டு ஊர்வலமாக வருவர். வீதியின் இருமருங்கிலும் மஞ்சள், வேப்பிலை கலந்த நிறைகுடம் வைக்கப்படும். அதனை கொம்பு கொண்டு வருபவர் மீது ஊற்றிச் சொரியப்படும். அதன் பின் குளிர்த்தியும் வாழியும் பாடி முடித்தலோடு கொம்பு விளையாட்டு நிறைவு பெறும்.

இவ்வாறு தம்பிலுவில், பாணமை கிராமங்களிலும் இக்கொம்புமுறி விளையாட்டு இடம்பெற்று வந்து தமிழ், சிங்கள மக்களிடையே கானப்பட்ட சுமூகமான நல்லுறவு காணப்பட்டது. இதனால் திருமண உறவும், சமூகநல்லிணக்கமும் இரு கிராமங்களிலும் காணப்பட்டது. இவ்வாறு காணப்பட்ட உறவு நிலை தற்காலத்திலே குறைவடைந்து சென்றுள்ளது. அந்த வகையில் இவ்விரு கிராமங்களிடையே இக் கொம்புமுறி விளையாட்டினால் ஏற்பட்ட உறவுநிலை இன்று இல்லாமல், இருப்பதற்கானகாரணத்தையும், சமூகநல்லிணக்கத்தினையும் பேணுகின்ற முறையினை கண்டறிவதற்கான ஒரு ஆய்வாக இவ் ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# பொருளடக்கம்


| | பக்க எண் |
|---|---|
| நன்றியுரை | |
| ஆய்வு சுருக்கம் | |
| **அத்தியாயம் - 01** | |
| 1.0 ஆய்வுத் தலைப்பு | 1 |
| 1.1 ஆய்வுப் பிரச்சினை | 1 |
| 1.2 ஆய்வு வரையரை | 1 |
| 1.3 இலக்கிய மீளாய்வு | 2 |
| 1.4 ஆய்வின் நோக்கம் | 3 |
| 1.5 ஆய்வு கருதுகோள் | 3 |
| 1.6 ஆய்வு முறை | 3 |
| 1.7 ஆய்வுத் தரவு | 3 |
| 1.8 ஆய்வு பகுப்பு | 4 |
| **அத்தியாயம் - 02** | |
| 2.1 தம்பிலுவில் பாணமை கிராமம் பற்றிய அறிமுகம் | 5 |
| 2.2 தம்பிலுவில் கண்ணகி அம்மன் ஆலய அமைவிடம் | 6 |
| 2.3 தம்பிலுவில் கிராமத்தில் கண்ணகி வழிபாடு தோன்றிய வரலாறு பாணமை கிராம அறிமுகமும் கொம்பு முறி விளையாட்டும். | 7-12 |
| 2.4 கொம்புமுறியின் சடங்கு தன்மைகளும், விளையாட்டுத் தன்மைகளும் | 13-19 |
| 2.5 கொம்புமுறி விளையாட்டின் கலைக்கூறுகள் | 20 |
| 2.6 கொம்பு முறி விளையாட்டு நிகழ்த்துகையின் அடிப்படை கூறுகள் | 21-23 |
| **அத்தியாயம் - 03** | |
| 3.1 கொம்புமுறியின் வரலாறு | 24-25 |
| 3.2 நிகழ்த்துகை முறை | 26-27 |
| 3.3 சேரிபிரிப்பு முறை | 28-29 |
| 3.4 போர்த்தேங்காய் அடித்தல் தொடக்கம் வசந்தன் ஆடல் | 30-32 |
| 3.5 கொம்புமுறி நிகழ்த்துகைகுறிய அவசியமான பொருட்கள் | 33-37 |

அத்தியாயம் - 04

4.1 தம்பிலுவில், பாணமையில் கொம்புமுறி விளையாட்டின் முக்கியத்துவம். 38-48

4.2 கொம்புமுறி பாடல்களும் காவியங்களும் 49-52

4.3 தம்பிலுவில் கண்ணகி அம்மன் பள்ளுப் பாடல்கள் 53-54

4.4 காவியம் 55-65

அத்தியாயம் - 05

5.1 சமூக நல்லிணக்கம் தொடர்பாக இலங்கையில் மேற்கொண்ட செயற்பாடுகளும் நிறுவணங்களின் சமூக நல்லிணக்க செயற்பாடும். 66-67

5.2 தம்பிலுவில், பாணமை கிராமங்களில் கொம்புமுறி விளையாட்டின் சமகால தேவைகள். 68-69

5.3 தம்பிலுவில், பாணமை கிராமங்களில் கொம்புமுறி விளையாட்டு அருகிச் சென்றமைக்கான காரணங்கள். 70-72

முகவுரை 73

உசாத்துனை மூலங்கள் 74